இன்னும் முடிவாகவில்லை. இப்பொழுது புதியதாக அமைக்கப்பட்ட போர்ட் ஆப் டைரெக்டர்களில் யார் யார் புதிது யார் பழையவர் என்று சொல்வதற்கு இல்லை. அதற்கு என்று தனிக் கேள்வி போட்டால் நான் பதில் சொல்லுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : டைரெக்டர்கள் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது என்பது உண்மையா? அப்படி தேர்தல் நடக்க வேண்டும் என்று ஏதாகிலும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா? இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் விசாரிக்க நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா? தேர்தல் நடைபெறவில்லை என்றும் புது டைரெக்டர்கள் வரவில்லை என்றும் தான் தெரியவருகிறது. அதைப் பற்றி விசாரிப்பாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : If the hon. Member is not satisfied, he can ask a question of that type. Certainly I will take this information and get further particulars.

Mental Hospital, Madras

1-30 p.m. * 188 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of patients in the Mental Hospital in the Madras City in 1957; and

(*b*) how many are (i) men, (ii) women, (iii) boys, (iv) girls, (v) Anglo-Indians; and (vi) Foreigners?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 3,594.

(*b*) Men—2,491.

Women—1,057.

Boys—33.

Girls—13.

Of these 76 were Anglo-Indians and one a Foreigner.

SRI P. G. MANICKAM : சென்னை நகரத்திலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் பைத்தியக்காரர்கள் அனுப்பப்படுவதால், பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆதலால், இன்னும் இரண்டொரு ஆஸ்பத்திரிகளை மற்ற ஜில்லாக்களிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மதுரையில் புதிதாக இம்மாதிரி ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்த உத்தேசம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : பைத்தியத்தைத் தீர்ப்பதற்கு மருத்துவ முறையும், மனோதத்துவ முறையும் (psychiatry) ஆக இரண்டு முறைகளும் கலந்து கையாளப்படுகிறதா ? அல்லது வெறும் மருத்துவ முறை மாத்திரம் கையாளப்படுகிறதா ? Doctors, psychiatrists இருவரும் சேர்ந்து பைத்தியத்திற்கு கீழ்ப்பாக்கத்திலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைத்தியம் செய்கிறார்களா ?

MR. SPEAKER : A doctor may be a psychiatrist also!

THE HON. SRI M. A. MANICKAVELU : இரண்டு முறைகளும் இருக்கின்றன. ஆனால் psychiatric treatment இன்னும் பெரிய அளவிலே கையாளப்படவில்லை ; கொஞ்சங் கொஞ்சமாக அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

4th March 1958]

SRI V. SANKARAN : நான் வேடிக்கையாக ஒரு கேள்வி கேட்டால் கனம் அங்கத்தினர் கோபித்துக்கொள்ளமாட்டார் என்று நினைக்கிறேன். எத்தனை ஹரிஜனங்கள் அங்கே சேர்க்கப்பட்டார்கள் ?

MR. SPEAKER : I rule that question out of order. I would like hon. Members to take things seriously.

SRI R. SRINIVASA IYER : Is there any proposal to start a Mental Hospital in Tanjore district?

THE HON. SRI M. A. MANICKAVELU : We are thinking of starting a medical college there. I do not know whether a Mental Hospital is necessary there! (Laughter).

Tools factory at Salem

*189 *Q*.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a semi-machine tools factory at Salem, making use of the locally available raw materials?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI M. P. SUBRAMANIAM : ஒவ்வொரு மாவட்டமாக ஐந்தாண்டுத் திட்டப் பிரசாரப் புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. அது போல, சேலம் மாவட்டப் பிரசாரப் புத்தகத்தில், அங்கே ஸெமி-மெஷின் டூல் பாக்டரி யொன்று ஆரம்பிக்கப் போவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? அது வெறும் பிரசாரத்திற்காகத்தானே என்று வெளியிடப்பட்டதா ? அல்லது திட்டம் எடுத்துக்கொள்வதற்காகப் போடப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கோரிக்கை ஒன்று. நிறைவேற்றுவதற்காக நாம் முயற்சி எடுத்துக்கொண்டு சாதிப்பது ஒன்று. எல்லா ஜில்லாக்களிலும் நாம் இந்த விதமாக சிறு கருவிகள் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய நோக்கம். அவ்வாறு ஒவ்வொரு இடத்திலும் வைக்க வேண்டுமென்று தீர்மானித்து போட்டிருந்தோம். இப்பொழுது அந்த விதமாக சிறு கருவிகள் செய்கின்ற இயந்திரம் அங்கு வைப்பதாக திட்டத்தில் இல்லை.

SRI M. P. SUBRAMANIAM : ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தில் என்ன ஆதாரத்தின்கீழ் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டது ? பிறகு என்ன கஷ்டத்தின் காரணமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நான் ஆரம்பித்தில் சொன்னதுபோல், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் சிறு கருவிகள் செய்கின்ற ஒரு ஸ்தாபனம் வைக்க வேண்டும் என்பது நம்முடைய நோக்கம். அந்த முறையிலே செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், நிதி நிலைமைக் குறைவினாலும், சிறு கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட தொகை சற்றுக் குறைந்துவிட்டதாலும், இவ்விதமான திட்டம் 1958–59-ல் நிறைவேற்ற அங்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை. அடுத்த வருஷத்தின் நிதி நிலைமையைப் பார்த்து, பிறகு இதைப்பற்றி முடிவு செய்யலாம்.

SRI D. S. AUTHIMOOLAM : நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்படி ஸெமி-டூல்ஸ் பாக்டரி என்று ராஜ்யத்திற்கு எத்தனை பாக்டரிகள் ஆரம்பிப்பதாக உத்தேசம் இருக்கிறது என்று தயவு செய்து சொல்ல முடியுமா ?